# கடவுள் என்பவர் யார்?

இது ஒரு சுவாரசியமான கேள்வி. இதற்கு பலவகைப்பட்ட பதில்கள் தரப்படுகின்றன. “கடவுளே கிடையாது” என்று சொல்லுகிற சிலரும் உண்டு. இந்தக் கேள்விக்கான உங்களுடைய பதில் நீங்கள் மற்றவர்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பதையும், உங்களுடைய நித்திய வாழ்வை எங்கே செலவிடப்போகிறீர்கள் என்பதையும் தீர்மானிக்கிறது. கடவுள் யார் என்பதைப் பற்றிய நம் நம்பிக்கை நாம் கடவுளை ஆராதிப்பவர்களா அல்லது சுய ஆராதனைப் விரும்பிகளா என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. நாம் கடவுளை நேசிப்பவர்களானால் மனிதர்களையும் நேசிப்போம். உலகத்தில் மூன்று பெரிய மதங்கள் உள்ளன. மூன்றும் ஒன்றுக்கொன்று எதிரான கருத்துக்களைக் கொண்டவை. மூன்றுமே சரியானவை என்றும் இருக்கமுடியாது.

விளக்குகிறேன், பாருங்கள்;

“கடவுள் மனிதனுக்காக மரித்தார்” என்கிறது கிறிஸ்தவம்.
“மனிதன் கடவுளுக்காக மரிக்கவேண்டும்” என்கிறது இஸ்லாம்.
“நீங்கள் மனதில் உருவகித்துக்கொள்ளும் ஒருவர்தான் கடவுள்” என்கிறது இந்துமதம்.
“கடவுளே மனிதனைப் படைத்தார்” என்கிறது கிறிஸ்தவம்.

இஸ்லாம் = சுய ஆராதனை
இந்துமதம் = சுய ஆராதனை
கிறிஸ்தவம் = தேவனின் கிருபை

சுய ஆராதனை என்பது தேவன் ஏற்கனவே உங்களுக்காகச் செய்துமுடித்திருப்பதை நீங்கள் அவருக்காகச் செய்யமுயல்வது!
கிருபையோ நீங்களே செய்துகொள்ள முடியாது என்பதை உங்களுக்காகத் தேவன் செய்வதாகும்!
கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்ச்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல. (எபேசியர் 2:8ஐப் பார்க்கவும்). நாம் அனைவரும் தவறு செய்பவர்கள்தான். இயேசுகிறிஸ்துவை நிராகரித்ததே நான் செய்த தவறுகளில் மிகப் பெரியது. என்னுடைய மிகச்சிறந்த முடிவு என்பது இயேசுகிறிஸ்துவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டதே. இயேசு பேதுருவை இப்படிக் கேட்டார் – “நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?” ஆம். நீங்கள் இயேசுகிறிஸ்து யார் என்று சொல்லுகிறீர்கள்? மத்தேயு 16:16 ஐப் பார்க்கவும். உங்கள் வாழ்க்கையின் மிக மிக முக்கியமான இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என்பதே உங்களுடைய கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தை தீர்மானிக்கப் போகிறது. நீங்கள் அவரை யார் என்று சொல்லுகிறீர்கள்?

இயேசு உங்களை நேசிக்கிறார்

GodWhoIsGod.com